உ
சிவமயம்
நாற்பத்திரண்டாம் திருமுறை மாநாடு - 2022
திருமுறைப் போட்டிகள்
(http://www.singaithirumurai.org)

அன்புடையீர், வணக்கம்.

கடந்த நாற்பத்தொன்று ஆண்டுகளாகச் சிங்கப்பூரில் திருமுறை மாநாடு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அதற்கு உங்களின் உணர்வுப் பூர்வமான ஈடுபாடும் உங்களிடையே ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்வுமே முக்கியக் காரணங்கள். கோவிட்19 பெருந்தொற்றுக் காலத்திலும் தொடர்ந்து திருமுறைகளை இணையத்தின் மூலம் சிங்கப்பூர் அன்பர்கள் கற்று வருவது அவர்களது சைவப்பற்றினை நன்கு எடுத்துக்காட்டுகிறது. இவ்வாண்டும் (2022) வருகிற ஜூலை மாதம் 29,30.31 ஆகிய தேதிகளில் நாற்பத்திரண்டாம் திருமுறை மாநாடு நடைபெற உள்ளது. திருமுறைகளை இளையர்களிடம் பரப்புவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு நடத்தப்படும் போட்டிகள் கடந்த ஆண்டைப்போல் அல்லாமல் சில சிறிய மாற்றங்களோடு வழக்கமாக நடைபெறுவது போல் நடைபெறும். இவ்வாண்டு திருமுறை ஓதும், பேசும் போட்டிகளில் நேரில் பங்கேற்பவர்களுக்கு முதல் மூன்று பரிசுளோடு ஊக்கப்பரிசுகளும் வழங்கப்படும். திருவேடங்களில் பங்கேற்போர் தங்களது காணொளிகளைக் கடந்த ஆண்டைப்போல் பதிவேற்றம் செய்ய வேண்டும். பதிவேற்றம் செய்த அனைவருக்கும் பக்கேற்றதற்கான நற்சான்றிதழ்கள் வழங்கப்படும். கடந்த ஆண்டுகளில் நீங்கள் காட்டிய ஆதரவைப்போல இவ்வாண்டும் விதிமுறைகளுக்கு உட்பட்டுத் திருமுறைக் காணொளிகளைப் பதிவேற்றம் செய்தும் நேரில் கலந்துகொண்டும் ஆதரவு தரும்படி கேட்டுக்கொள்கிறோம். நிகழ்வுகள் பற்றிய விவரங்களைத் திருமுறை மாநாட்டு இணையத்தளத்தில் (http://www.singaithirumurai.org) காணலாம்.

திருமுறைப் போட்டிகள் ஏற்பாட்டுக்குழுவின் சார்பில்,

டாக்டர் ஆ ரா சிவகுமாரன்
ஒருங்கிணைப்பாளர் – திருமுறைப்போட்டிகள்.

II. திருவேடநிகழ்ச்சிகளில் பங்கேற்றல்.
பங்கேற்போர் தங்களது காணொளிகளை 18 ஜூன் 2022க்குள் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

1. திருவேட நிகழ்வு எட்டு பிரிவுகளாக நடைபெறும். முதல் மூன்று பிரிவுகள் பாலர்பள்ளி மாணவர்களுக்கு உரியன. ஏனைய பிரிவுகள் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு உரியன.

2. கலந்துகொள்வோர் குறிப்பிட்ட நாயன்மார்களைப் போல் வேடமிட்டு தோன்ற வேண்டும். பொருத்தமான வேடமிட்டுத் தோன்றுபவர்களுக்கே அதிக மதிப்பெண்கள் வழங்கப்படும்.

3. ஒருவர் மட்டுமே வேடமேற்று வேடத்திற்குரிய பேச்சைப் பேச வேண்டும். ஒரு நிமிடத்திற்குள் உங்கள் ஒளிக்காட்சி அமைதல் வேண்டும்

4. உடம்பில் தாங்கி இருக்கும் பொருட்களைத் தவிர வேறு எந்தப்பொருளும் அனுமதிக்கப்பட மாட்டாது.

திருவேடநிகழ்ச்சி 2022.

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | | திருவேட நிகழ்வுகளுக்கான நாயன்மார்கள்/ திருமுறை ஆசிரியர்கள் தோற்றம். |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| F1/ N | 2.1.2018கும் 1.1.2019க்கும் இடையே பிறந்தவர்கள் | | 1. ஆனாய நாயனார்<br>2. அப்பூதி அடிகள் நாயனார்<br>3. மங்கையர்க்கரசியார்<br>4. திருஞான சம்பந்தர்<br>5. சுந்தரர் |
| F2/ K1 | 2.1.2017கும் 1.1.2018க்கும் இடையே பிறந்தவர்கள் | | |
| F3/ K2 | 2.1.2016கும் 1.1.2017க்கும் இடையே பிறந்தவர்கள் | | |
| F4/ P1 | 2.1.2015க்கும் 1.1.2016க்கும் இடையே பிறந்தவர்கள் | | 1. திருநாவுக்கரசர்<br>2. காரைக்காலம்மையார்<br>3. ஏனாதி நாயனார்<br>4. முருக நாயனார்<br>5. சேரமான் பெருமாள் நாயனார் |
| F5/ P2 | 2.1.2014க்கும் 1.1.2015க்கும் இடையே பிறந்தவர்கள் | | |
| F6/ P3 | 2.1.2013க்கும் 1.1.2014க்கும் இடையே பிறந்தவர்கள் | | |
| F7/ P4 | 2.1.2012க்கும் 1.1.2013க்கும் இடையே பிறந்தவர்கள் | | 1. காரைக்காலம்மையார்<br>2. மாணிக்கவாசகர்<br>3. சிறப்புலி நாயனார்<br>4. கோச்செங்க நாயனார்<br>5. திலகவதியார்<br>6. மங்கையர்க்கரசியார் |
| F8/ P5-P6 | 2.1.2010க்கும் 1.1.2012க்கும் இடையே பிறந்தவர்கள் | | |

I. திருமுறை ஓதும் போட்டி (தனித்தனி நிலையில்)

பங்கேற்போர் குறிப்பிட்ட எண்ணிக்கையில் கட்டம் கட்டமாக அனுமதிக்கப்படுவர்.
அனைவரும் ஒரே நேரத்தில் நிகழ்வு நடைபெறும் மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

1. இந்நிகழ்வுக்குரிய பாடல்கள் அருள்மிகு தெண்டாயுதபாணி ஆலய ஓதுவார் திருமுறை கலாநிதி, பண்ணிசைத் திலகம் எஸ் வைத்திய நாத தேசிகர் அவர்களால் பாடப்பட்டு ஒலிவட்டில் (Audio CD) பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்பாடல்களை http://www.singaithirumurai.org என்னும் இணையத்தளத்தின் மூலம் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
2. பங்கு பெறுபவர்கள் தத்தம் பிரிவுகளுக்குரிய பாடல்களைத் திருவுளச்சீட்டு மூலம் தேர்ந்தெடுத்துப் பாடவேண்டும்.
3. சுதிப்பெட்டி, தாளம் அனுமதிக்கப்படும்; அவற்றுக்காகத் தனியே மதிப்பெண்கள் கிடையா.
4. பங்கேற்போர் http://www.singaithirumurai.org என்னும் இணையத்தளத்தின் மூலம் நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

திருமுறை ஓதும் போட்டி.
திருமுறை ஓதும் போட்டி நடைபெறும் இடங்கள்:

24-4-22 ஞாயிற்றுக்கிழைமை,காலை 8.30: அருள்மிகு ருத்திரகாளியம்மன் ஆலயம், டெப்போரோடு.
10-7-22 ஞாயிற்றுக்கிழமை, காலை 8.30: இடம் : அருள்மிகு ருத்திரகாளியம்மன் ஆலயம், டெப்போரோடு.

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | தேதி | இந்நிகழ்வுக்குரிய பாடல்களை இணையத்தளத்தில் கேட்கவும். http://www.singaithirumurai.org |
|---|---|---|---|
| R1-N | 2.1.2018க்கும் 1.1.2019க்கும் இடையே பிறந்தவர்கள் | 10-7-22 | 1. அருத்தம தாவது நீறு அவலமறுப்பது நீறு<br>2. நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்<br>3. உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன் |
| R2-K1 | 2.1.2017கும் 1.1.2018க்கும் இடையே பிறந்தவர்கள் | 10-7-22 | |
| R3-K2 | 2.1.2016க்கும் 1.1.2017க்கும் இடையே பிறந்தவர்கள் | 10-7-22 | |
| R4-P1 | 2.1.2015க்கும் 1.1.2016க்கும் இடையே பிறந்தவர்கள் | 10-7-22 | 1. செடியாய வுடல்தீர்ப்பான் தீவினைக்கோர்<br>2. சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் |
| R5-P2 | 2.1.2014க்கும் 1.1.2015க்கும் இடையே பிறந்தவர்கள் | 10-7-22 | |

| | | | |
|---|---|---|---|
| | | | 3. பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார்<br>4. கற்பனை கடந்த சோதி |
| R6-P3 | 2.1.2013க்கும் 1.1.2014க்கும் இடையே பிறந்தவர்கள் | 10-7-22 | |
| R7-P4 | 2.1.2012க்கும் 1.1.2013க்கும் இடையே பிறந்தவர்கள் | 10-7-22 | 1. வேத வேள்வியை நிந்தனை செய்துழல்<br>2. கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை<br>3. வணங்கத்தலைவைத்து வார்கழல்வாய்<br>4. பத்தியாய் உணர்வோர் அருளைவாய் |
| R8-P5 | 2.1.2011க்கும் 1.1.2012கும் இடையே பிறந்தவர்கள் | 10-7-22 | |
| R9-P6 | 2.1.2010க்கும் 1.1.2011க்கும் இடையே பிறந்தவர்கள் | 24-4-22 | |
| R10-S1&2 | 2.1.2008க்கும் 1.1.2010க்கும் இடையே பிறந்தவர்கள் | 24-4-22 | 1. துணிவளர் திங்கள் துளங்கிவிளங்க<br>2. சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி<br>3. தம்மையேபுகழ்ந்து இச்சைபேசினும்<br>4. சொல்லாண்ட சுருதிப்பொருள்<br>5. அன்பரங் கிருப்ப நம்பர் |
| R11- S3&4 | 2.1.2006க்கும் 1.1.2008க்கும் இடையே பிறந்தவர்கள் | 24-4-22 | |
| R12 Open | 2.1.1997க்கும் 1.1.2006க்கும் இடையே பிறந்தவர்கள்ப் | 24-4-22 | பஞ்ச புராணம் (விரும்பிய பாடல்கள்) |
| R13 & R14 Open | 2.1.1996க்கு முன்பிறந்தவர்கள் | 24-4-22 | பஞ்ச புராணம் (விரும்பிய பாடல்கள்) |
| GR15 குழுப் போட்டி | மேற்படி பிரிவு R4-R9ஐச் சேர்ந்தவர்கள் (6 முதல் 8 பேர் வரை) | 10-7-22 3.00PM | திருமுறைப் பாடல்கள் மட்டும் |
| GR16 குழுப் போட்டி | மேற்படி பிரிவு R10-R13ஐச் சேர்ந்துவர்கள் (6 முதல் 8 பேர் வரை) | 10-7-22 3.00PM | திருமுறைப் பாடல்கள் மட்டும் |

**பங்கேற்போர் *http://www.singaithirumurai.org* என்னும் இணையத்தளத்தின் மூலம் நேரடியாக விண்ணப்பிக்கலாம்.**

**II. திருமுறை பேச்சுப்போட்டி.**
*17-7-22 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 இடம் :* **அருள்மிகு ருத்திரகாளியம்மன் ஆலயம், டெப்போரோடு.**
**திருமுறைப் பேச்சுப்போட்டி ஒன்பது பிரிவுகளாக நடைபெறும். குறிப்பிட்டப்பட்ட நேரத்திற்கு மேல் பேசும் பேச்சு நடுவர்களால் கருத்தில் கொள்ளப்படமாட்டாது.**

**திருமுறைகள் பற்றிப் பேசுவதற்குரிய தலைப்புகள் – 2022.**

| பிரிவு | பங்குபெற இயல்வோர் | | தலைப்புகள் (இவற்றுள் ஏதேனும் ஒரு தலைப்பில் பேசலாம்) | பேசும் நேரம் |
|---|---|---|---|---|
| O1/ P1 | 2.1.2015க்கும் 1.1.2016க்கும் இடையே பிறந்தவர்கள் | | 1. நின்றசீர் நெடுமாற நாயனார்<br>2. திருப்புகலூர் பதிகம் தம்மையே புகழ்ந்து<br>3. சாத்தமங்கை (சீயத்தாமங்கை) | 3 நிமிடங்கள் |
| O2/ P2 | 2.1.2014க்கும் 1.1.2015க்கும் இடையே பிறந்தவர்கள் | | | |
| O3/ P3 | 2.1.2013க்கும் 1.1.2014க்கும் இடையே பிறந்தவர்கள் | | | |
| O4/ P4 | 2.1.2012க்கும் 1.1.2013க்கும் இடையே பிறந்தவர்கள் | | 1. கோட்செங்கட் சோழ நாயனார்<br>2. கோயில் பதிகம் (மன்னுக தில்லை)<br>3. திருநாகை (நாகப்பட்டினம்) | 3 நிமிடங்கள் |
| O5/ | 2.1.2011க்கும் 1.1.2012க்கும் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| *P5* | இடையே பிறந்தவர்கள் | | | |
| *O6/ P6* | *2.1.2010*க்கும் *1.1.2011*க்கும் இடையே பிறந்தவர்கள் | | | |
| *O7/ S1&2* | *2.1.2008*க்கும் *1.1.2009*க்கும் இடையே பிறந்தவர்கள் | | *1.* சிவப்பிரகாச வள்ளலார்<br>*2.* நீத்தல் விண்ணபம்<br>*3.* திருக்குற்றாலம் | *5* நிமிடங்கள் |
| *O8/ S3&4* | *2.1.2006*க்கும் *1.1.2007*க்கும் இடையே பிறந்தவர்கள் | | | |
| *O9 Open* | *2.1.2006*க்கு முன்பிறந்தவர்கள் | | *1.* ராஜ ராஜ சோழன்<br>*2.* தொகை அடியார்கள் | *5* நிமிடங்கள் |

*III.* திருஞானசம்பந்தர் அருளிய அவ்வினைக்கு இவ்வினை-திருநீலகண்ட திருப்பதிகம் பாராயணம்.

| பங்குபெற இயல்வோர் | நாள் நேரம் | இடம் |
|---|---|---|
| *1-1-1997*க்கு பின் பிறந்தவர்கள் *25*வயதுக்குக் குறைந்தோர் | *17-7-22* *8.30AM* | அருள்மிகு ருத்திரகாளியம்மன் ஆலயம் |

*VI* திருமுறைப் பயிற்சிக் கழகம். நிலை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு மதிப்பீட்டுத் தேர்வு.
நவம்பர் *2022* ஞாயிற்றுக்கிழமை, இடமும் தேதியும் பின்னர் அறிவிக்கப்படும்

திருமுறைப் பயிற்சிக் கழகத்தின் நிலை ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறுக்கான மதிப்பீட்டுத் தேர்வு நடைபெற உள்ளது. திருமுறைப் பயிற்சிக் கழகத்தினால் வெளியீடு செய்யப்பட்டுள்ள பாடத்திட்டங்களிலிருந்து வினாக்கள் கேட்கப்படும். பாடத்திட்டத்தை *http://www.singaithirumruai.org* என்னும் முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். .

எழுத்துத் தேர்வு, வாய்மொழித் தேர்வு என இரு கூறுகளாகத் தேர்வுகள் நடத்தப்படும். தேர்வில் சிங்கப்பூரர்களும், சிங்கப்பூர் நிரந்தரவாசிகளும், சிங்கப்பூர் வேலை அனுமதிசிட்டு உள்ளவர்கள் மட்டுமே பங்கு பெறலாம். பதிவு செய்துகொள்ள வேண்டியது அவசியம். பதிவு செய்யாதவர்கள் தேர்வுக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்

எழுத்துத் தேர்வைக் கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்க வேண்டும்.

வாய்மொழித் தேர்வில் பாடத்திட்டத்தில் உள்ள பாடல்களிலிருந்து பாடல்கள் கேட்கப்படும்.

தேர்ச்சி பெற்றோர்க்குச் சான்றிதழ்கள் மட்டுமே வழங்கப்படும்.

*VII* பொது

1. பதிவேற்றம் செய்யப்படும் காணொளி பற்றிய முடிவுகளில் மாநாட்டுக் குழுவினரின் தீர்ப்பே இறுதியானது. தீர்ப்பை எதிர்த்து முறையீடு செய்ய இயலாது.

2. இப்போட்டிகளில் (திருமுறை ஓதும்போட்டி பிரிவு *R13-14* தவிர) சிங்கப்பூர்க் குடிமக்கள், நிரந்தரவாசிகள் ஆகியோர் மட்டுமே கலந்துகொள்ளலாம்.

3. இணையத்தளத்தின் மூலமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

4. *24-4-2022* தேதியில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வோர் விண்ணப்பங்களை *14-3-2022*க்குள்ளும் ஏனைய தேதிகளில் நடைபெறும் நிகழ்ச்சிகளுக்கான விண்ணப்பங்களை *30-6-2022*க்குள்ளும் இணையத்தின் மூலம் அனுப்பி வைக்க வேண்டும். தங்களது பெயர்களைச் சரியான முறையில் இணையத்தளத்தில்

பதிந்துகொள்ள வேண்டும். கொடுக்கப்பட்ட விவரங்களின் பெயர்களிலேயே நற்சான்றிதழ்கள் வழங்கப்படும். திருத்தங்கள் வரவேற்கப்படவில்லை. நிகழ்ச்சியன்று பதிவு செய்துகொள்ள இயலாது. மேல் விவரங்களுக்கு *98277780, 90059454, 90616257* ஆகிய எண்களுடனோ *rsg929@hotmail.com* , *sivayanama.thirumurai@gmail.com* மின்னஞ்சல் முகவரியிலோ தொடர்பு கொள்க.

இணையத்தள முகவரி *(http://www.singaithirumurai.org)*

திருமுறைகள் ஒலிக்கட்டும் திருவருள் பெருகட்டும்
திருச்சிற்றம்பலம்